சேர்ந்த யாரும் பேசவேயில்லை. அப்படி பேசாமல் இருக்கும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி ஏன் பேசினீர்கள்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எங்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் மற்றவர்கள் எல்லாம் பேசுகின்றார்களோ அவர்களுக்குப் பதில் சொல்வதற்கு அந்த இடந்தான் எனக்குக் கிடைத்தது. அவர்கள் பேசாத நேரம் இல்லை; எழுதாத ஏடுகள் இல்லை என்ற அளவுக்கு அது நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, பதில் சொன்னேன். அவர்கள் பேசுவதைவிட நான் அதிகமாகப் பேசவில்லை. ஓரளவுக்கு குறைவாகவே பேசியிருக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் பேசவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் நீங்கள் பேசுவதற்கு தேர்ந்தெடுத்துக் கொண்ட இடம் அரசாங்க விழாவாக இருந்ததே என்பதுதான் என்னுடைய கவலை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அரசாங்க விழாவாக இருந்தாலும் முதலமைச்சர் என்ற காரணத்தால் பல் வேறு இடங்களில் பேசுவதற்கு பதில் சொல்ல எனக்குக் கடமை இருக்கிறது என்பதால் நான் அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்த நிலையில் இது அவை உரிமையை மீறிய பிரச்சனை இல்லை என்பதை இங்கே சொல்லி இதிலே தங்களுடைய தீர்ப்பு எதுவோ அதற்கு உட்பட நான் தயங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, எங்கள் தரப்பில் இந்த அவையிலே ஏதாவது தவறாகப் பேசியிருந்தால் அதற்கு நான் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி என்னுடைய தீர்ப்பு, பின்னர் அறிவிக்கப்படும்.

ஈ. அவை நடவடிக்கையைக் கண்காணிக்க போலீஸ் ஸ்பெஷல் பிராஞ்ச் அனுப்பிய சுற்றறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 27—2—1981 அன்று திரு. உமாநாத், திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோர் அவையில் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினைக்கு அரசுத் தரப்பிலே என்ன பதில் கூற விரும்புகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

1981 மார்ச் 4,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்சினை மீது அரசுத் தரப்பில் விளக்கத்தை நான் தர விரும்புகிறேன். சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர்–ஜெனரல் ஆப் போலீஸ் அவர்கள் கீழ்க்கண்ட விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்:—

31–1–1981-ம் தேதியன்று சி.ஐ.டி. துறை அனுப்பிய இரகசிய குறிப்பாணையில் இரு அவைகளிலும் விவாதிக்கப்படுகின்ற பிரச்சினைகளை உடனுக்குடன் தெரிந்து கொண்டு தேவையான முழுமையான தகவல்களை மாநிலத்தின் எந்த இடத்தோடும் தொடர்பு கொண்டு பெற்று அரசுக்கும் அவைகளுக்கும் உண்மையை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் பிறப்பிக்கப்பட்டது. எந்த ஒரு கட்சியையோ! எந்த ஒரு மாண்புமிகு உறுப்பினரையோ தனிப்பட்ட முறையில் கண்காணிப்பதற்கு உத்தரவிடப்படவில்லை.

அவையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்குக் காரணமாக இருக்கும் கருத்துக்களையும் உடனுக்குடன் தெரிவிக்குமாறு உரியவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. பல சமயங்களிலே சேகரித்துத் தருவதற்கு போதிய அவகாசம் கிடைக்காதது ஒரு பெரிய குறையாக இருந்து வருகிறது. குறிப்பாக சட்டம், ஒழுங்கு போன்றவைகளில் உடனுக்குடன் சரியான விவரங்களை வேகமாக சேகரிப்பது அவசியமாகின்றது. இந்த நடவடிக்கை அவையின் உரிமையை பாதிக்கும் என்று சி.ஐ.டி. துறை கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை. அப்படி பாதிப்பதாகக் கருதப்படும் என்று ஒரு ஐயம் எழுந்ததாலே அந்த குறிப்பாணை திரும்பப் பெறப்பட்டது. இனி, இம்மாதிரி எதுவும் நிகழாது என்று துறை உறுதி கூறுகிறது. எதிர்பாராதவிதமாக தவறான ஐயத்தை இந்தச் செயல் ஏற்படுத்தியதற்கு, இத்தகைய ஒரு கருத்து எழுந்ததற்கு சி.ஐ.டி. துறை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது என்று சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர்–ஜெனரல் கூறியிருக்கிறார், உண்மையில் யாரும் அவையின் அனுமதிச் சீட்டு பெறவில்லை. யாரும் அந்த ஆணைப்படி வந்திருந்து கவனிக்கவும் இல்லை. இனி, இம்மாதிரியாக நடைபெறக் கூடாது என்றும் நடைபெற்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்று சி.ஐ.டி. துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டு இந்தப் பிரச்சனையை இத்தோடு முடிக்க மாண்புமிகு உறுப்பினர்களும், பேரவைத் தலைவராகிய தாங்களும் உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை குறித்த * தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும்.

---

* 25–3–1981 அன்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

று